[23rd January 1965

திரு. எஸ். முருகையன் : ஒரு வராண்டாவின் உயரம் எட்டு அடிக்கு மேல் இருக்காது. அந்த இடத்தில் லுங்கியைச் சுற்றிக் கட்டிக்கொண்டு தொங்குவது எப்படி சாத்தியமாகும் என்பதை அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரொம்ப உயரமாக இருந்தால் தூக்குப் போட்டுக்கொள்ள முடியாது என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். இது குறைந்த உயரம். அதனுல்தான் இது சாத்தியமாயிற்று.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்படி போலிஸ் லாக்கப்பில் யார் இறந்தாலும் தற்கொலை செய்து கொள்ளப்பட்டதாகவே அறிவிக்கப்படுகிறது. ஏற்கனவேயே இந்த மாதிரியான சம்பவம் லாக்கப்பில் நடைபெறுதபடி பார்த்துக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறுர்கள். அப்படி இருந்தும் இந்த மாதிரி நடைபெற்றதற்கு அதிகாரிகளின்மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு சம்பவத்தின் போதும் இலாகா விசாரணை நடைபெறுகிறது. போலீசார்கள் மீது தவறு இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. முன்பு ஒரு முறை பிராசிக்யூஷன் கூடச் செய்தார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தச் சம்பவம் நடக்கிறபோது போலீசார் காவல் இருந்தார்களா ? இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்போது இல்லை, அவர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பல்லாவரம் போலீஸ் லாக்கப்பில் நான் இருந்திருக்கின்றேன். அதன் அமைப்பு எனக்குத் தெரியும். வராண்டாவின் எதிரில்தான் ரைட்டர் ரூம் இருக்கிறது. அங்கே எப்போது பார்த்தாலும் சென்ட்ரி கான்ஸ்டபிள் இருந்து கொண்டிருப்பான். 24 மணி நேரமும் ட்யூடி. அப்படி இருக்க அவர் தூக்குப் போட்டுக்கொள்ளக் கூடிய நேரத்தில் அங்கே ஒருவர் கூட இல்லாமல் போனது பற்றி அரசாங்கம் நன்கு விசாரிக்க முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்டேஷன் ரைட்டர் ராத்திரி பூராவும் இருப்பது இல்லை. அவர் வராண்டாவில் வைக்கப்பட்டு இருந்தார். அப்போது காவலாளியும் இல்லை. இதுபற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

Industrial Labour Weavers' Co-operative Societies.

* 83 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Industrial Labour Weavers' Co-operative Societies registered and started during the years 1963 and 1964 in Chingleput district ; and

(*b*) whether any such society was started in Tiruttani taluk?

23rd January 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Two.

(*b*) Yes. An Industrial Weavers' Co-operative Society was started in Podatturpet in Tiruttani taluk on 21st March 1964.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, it is clear that organisation of Weavers' Co-operative Societies is to encourage the labourers who are engaged in weaving. Is it a fact, Sir, that a master weaver has been put in charge of a society and he is running that society?

THE HON. SRI R. VENKATARAMAN : Industrial co-operative societies are organised for loomless weavers and the loomless weavers are generally admitted from out of the people working under master-weavers. If according to the hon. Member a master-weaver should never be a President of any such society, it will be very difficult for us to accept. If there is any specific complaint against that person, I shall certainly look into it.

பாலிடெக்னிக்குகளில் பணி புரிவோரின் ஊதியம்

*84 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாலிடெக்னிக்குகளில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அந்தத் திட்டம் நடைமுறைக்கு வர இன்னும் எவ்வளவு காலமாகும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் (அ) & (இ) பாலிடெக்னிக்குகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் 1—6—1964 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பாலிடெக்னிக்குகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுடைய சம்பளத்தை மத்திய சர்க்கார் கொடுக்கின்றதா ? அல்லது மாநில சர்க்கார் கொடுக்கின்றதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு பகுதி மத்திய சர்க்காரும், ஒரு பகுதி மாநில சர்க்காரும் கொடுக்கின்றது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 1—6—1964-ல் சம்பள விகிதம் மாற்றி அமைக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாற்றி அமைக்கப்பட்ட சம்பள விகிதம் மத்திய சர்க்கார் சம்பள விகிதத்திற்கு ஒத்ததாக இருக்கிறதா ? குறைவானதாக இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய அரசாங்கம், பாலிடெக்னிக்குகள் எல்லாவற்றிலும் ஒரேவிதமாக சம்பள விகிதம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் கொடுத்தால் மத்திய சர்க்கார் உதவி செய்வதாகச் சொன்னார்கள். அவர்கள் உதவி செய்வதால் நாம் அப்படியே கொடுக்கிறோம்.